
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1051

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

93

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




## சமூக ஊழல்களை ஒழிக்க உருவான இயக்கம்!

*1932-ஆம் ஆண்டு பெரியார் ஐரோப்பிய சுற்றுப்பயணம் மேற்கொண்ட வேளையிலும் சுயமரியாதை இயக்கம் தொய்வில்லாமல் இயங்கிக் கொண்டிருந்தது. அன்றைய தேசியவாதிகளின் கோட்டையாக கருதப்பட்ட சேலத்தில், கொலை மிரட்டல்கள், கல் வீச்சுகளைக்கூட பொருட்படுத்தாமல் முதல் சுயமரியாதை மாநாட்டை, பெரியார் இல்லாமலேயே சிறப்பாக நடத்தினர்.*

*07, 08.05.1932 ஆகிய 2 நாட்கள் சுயமரியாதைப் பார்க்கில் அமைக்கப்பட்ட திடலில் நடைபெற்றது. கே.வி.ஆர்.அர்த்தனாரி வரவேற்புரையாற்றினார். “சுயமரியாதை இயக்கத்தைக் கண்டு சிலர் பயப்படுகின்றனர். அப்படி யாரும் பயப்படத் தேவையில்லை. அறியாமை என்னும் இருளை அகற்றி, மக்களை விழிப்படையச் செய்வதுதான் சுயமரியாதை இயக்கம்” என்று கூறி மாநாட்டைத் திறந்துவைத்தார், அன்றைய புதுச்சேரி அமைச்சரான எ.வி.முத்தையா.*

*அன்று மாலை நீலாம்பிகை அம்மையார் தலைமையில், பெண்கள் மாநாடு அதே திடலில் நடைபெற்றது. “21 வயது கூட நிரம்பப்பெறாது தனியே ஒரு கண்டத்தில் இருந்து மற்றொரு கண்டத்திற்கு பாயும் ஆமி ஜான்சன் நாட்டில் பெண்கள் முன்னேற்றமடைவார்களா அல்லது “பெண்ணாகி வந்ததொரு மாயப்பிசாசு” என்று அசட்டுமொழி புரிகின்ற பட்டினத் தாரையும், அவர் போன்றவரையும் போற்றும் மனப்பான்மை கொண்ட நம் நாட்டில் பெண்கள் முன்னேற்றமடைவார்களா?” என்று அன்றைய பொது சமூகத்தின் உளவியலைக் கேள்வி கேட்டதுடன், “ஆண்களிடமிருந்து என்ன சுதந்திரம் பெற்றாலும் சரி, சொத்து சுதந்திரம் இல்லாவிட்டால், எவ்விதமான நற்பயனும் விளையப்போவதில்லை” என செங்கல்பட்டு மாநாட்டு தீர்மானத்தின் அவசியத்தை எடுத்துரைத்தார்.*

*மறுநாள் காலை 9 மணிக்கு சுயமரியாதைத் தொண்டர் மாநாடு நடைபெற்றது. அப்போது, கோவை வெரிவாட செட்டியார் டி.எம்.நாயர் படத்தைத் திறந்துவைத்தார். தொண்டர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஆதரித்து, குஞ்சிதம் அம்மையார் ஆங்கிலத்தில் அருமையானதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அதை ‘குத்தூசி’ குருசாமி தமிழில் மொழிபெயர்த்தார்.*

*பின்னர், மாலை 3 மணிக்கு சிங்காரவேலர் தலைமையில், சுயமரியாதை மகாநாடு தொடங்கியது. “மதத்தை ஒழித்து சாதியை நீக்கி, பெண்களுக்கு சம உரிமைகள் கிடைக்கச்செய்து, மறுமணமும் கலப்பு மணமும் இருபாலருக்கும் உரிமை உள்ளவை என்ற சித்தாந்தத்தை வற்புறுத்தி, தீண்டாமையை ஒழித்து, மிதமாக குழந்தைகளைப் பெற்று, இந்திய மக்களின் சமூக வாழ்வை சுகம்பெற செய்விப்பது உங்களுடைய நோக்கம் என்று எண்ணுகிறேன். இந்த இயக்கத்தைப் போன்று எந்த ஒரு இயக்கமும் இவ்விதமாக நமது சமூக ஊழல்களை வேர் களைய ஒரே காலத்தில் எழுந்ததை அறிந்ததில்லை. உங்களுடைய இயக்கத்தை, ‘One of the most comprehensive social reform organ’ என்று கூறக்கூடும்” என சுயமரியாதை இயக்கத்தின் நோக்கம், செயல்பாட்டைத் திறனாய்வு செய்து அற்புதமான உரை நிகழ்த்தினார் சிங்காரவேலர்.*

*மேலும், “நாம் விரும்புகின்ற ஜாதி ஒழிவு, சமய ஒழிவு, பெண் விடுதலை சமூக சமத்துவம், பொருளாதார சமத்துவம், மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தல் முதலியவைகளை செயலில் செய்ய வேண்டுமானால், அரசியலைக் கைப்பற்ற வேண்டும், அரசியலைக் கைப்பற்றாத வரையில் இந்த நோக்கங்களை நிறைவேற்ற முடியாது” என்றார். ஆனால், சுயமரியாதை இயக்கம் சமூக சீர்திருத்த இயக்கமாகவே செயல்படும் என குடிஅரசு ஏடு, அதற்கு விளக்கமளித்தது. எனினும், 16 ஆண்டுகள் கழித்து, அந்த பாதைக்கு அடித்தளமிட்டது திராவிட முன்னேற்றக் கழகம். செங்கல்பட்டு, ஈரோடு, விருதுநகர் சுயமரியாதை மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இம் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டன.*

**...கூட்டம் திரளும்**

## செயல்வீரர்களை வார்த்தெடுத்த உதயநிதி ஸ்டாலின்!

75 ஆண்டுகள் ஆன பின்பும் இளமைத் துடிப்புடன் இயங்கும் ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை திருவண்ணாமலையில் நடைபெற்ற இளைஞர் அணியின் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு உறுதி செய்துள்ளது.

அரசியல் மட்டத்திலும், ஊடக வெளியிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள இந்த சந்திப்பு குறித்து தனது சமூக வலைதளப் பக்கத்தில் எழுதியுள்ள மகளிர் அணி சமூக வலைதளப் பொறுப்பாளர் மருத்துவர் யாழினி, "திமுக இளைஞர் அணியின் வடக்கு மண்டலத்தைச் சேர்ந்த சுமார் ஒன்றரை லட்சம் நிர்வாகிகள் ஒரே குடையின் கீழ் திரண்ட பிரம்மாண்டமான சந்திப்பு. இது வெறும் அடையாளத்திற்காக கூடிய சம்பிரதாயக் கூட்டம் அல்ல; பல ஆண்டுகால கட்டமைப்பு மற்றும் கட்டுக்கோப்பான அரசியல் பணியின் வெளிப்பாடு.

14.12.2025 முரசொலியைப் புரட்டினாலே இந்த உண்மை தெள்ளத்தெளிவாக விளங்கும். வெறும் நான்கு சட்டமன்றத் தொகுதிகளின் நிர்வாகிகளுக்கான அறிவிப்பு மட்டுமே 35 முழுப் பக்கங்களுக்கு விரிந்து கிடக்கிறது. மாநிலம் முதல் கிளை மற்றும் பூத் கமிட்டி வரை, கழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க அமைப்பை அடியொற்றி, எவ்வளவு நுணுக்கமாக இந்த இளைஞர் படை கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதற்கு இதுவே சாட்சி.

இந்த முன்னெடுப்பைத் தனித்து நிறுத்துவது அதன் தெளிவான நோக்கம் தான். இளைஞர்களைக் கட்சிக்குள் கொண்டுவருவதோடு நின்றுவிடாமல், அவர்களுக்குத் தொடர் கொள்கைப் பயிற்சி வகுப்புகள், அரசியல் தெளிவு மற்றும் பொறுப்புகளை வழங்கி, தாங்கள் சார்ந்த இயக்கத்தையும், மாற்றத் துடிக்கும் சமூகத்தையும் புரிந்துகொண்ட செயல்வீரர்களாக அவர்களை வார்த்தெடுத்துள்ளனர்.

இந்த இளம் திராவிட பட்டாளத்தை அர்ப்பணிப்புடனும், ஒழுக்கத்துடனும், கொள்கைத் தெளிவுடனும் வளர்த்தெடுக்கும் கழக இளைஞரணிச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தி.மு.க. இளைஞர் அணிக்கும் நன்றிகள்.

ஒரு இயக்கம் தன்னைத்தானே எப்படி ஜனநாயக முறைப்படியும், உறுதியுடனும் புதுப்பித்துக் கொள்கிறது என்பதற்கு இதுவே மிகச்சிறந்த எடுத்துக்காட்டு!" என்கிறது அவரது பதிவு.

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

93

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




## விளிம்பு நிலை மக்களின் குரல்!

*எந்த ஓர் அரசும் நிலையாக நடப்பதற்கு, ஓர் அரசமைப்பு அவசியமானது, அது சார்ந்த நிறுவனங்களும் சமூக மாற்றங்களை நிகழ்த்த இன்றியமையாதவை. அரசமைப்பு, நிறுவனங்கள் போன்றவற்றைத் தாண்டி அதை செயல்படுத்தும் இடத்தில இருக்கும் அரசு அதிகாரிகளும் முக்கியமானவர்கள். இந்தியா போன்ற சாதிய ஏற்றத்தாழ்வுகள் அதிகம் இருக்கும் இடங்களில் பொறுப்பான அதிகாரிகளின் தேவை அதிகம். பிரிட்டிஷ் காலத்து ஐ.சி.எஸ். தான் நவீன இந்தியாவின் ஐ.ஏ.எஸ். பதவியாக இருந்துவருகிறது. அது நவீனப்பட்டாலும் அதன் காலனிய தன்மையும், உயர்சாதி மனநிலையும் மறைந்தபாடில்லை.*

*இதில் சில விதிவிலக்குகளும் உண்டு, அப்படியானவர்களில், இந்திய அரசின் முன்னாள் செயலாளர் ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி பி.எஸ்.கிருஷ்ணன் முக்கிய மானவர், சர்வ அதிகாரம் கொண்ட ஒரு அமைப்புக்குள் இருந்துகொண்டு தன்னாலான சமூகநீதிக்கான அறப்போரை எந்த சமரசமும் இன்றி, அவர் தொடுத்தார். கேரளா வில் பிறந்த இவர் தன்னை சாதிக்கு எதிரானவராகவும் மதங்களுக்கு அப்பாற்பட்ட வராகவும் அறிவித்துக் கொண்டார்.*

*சுய அனுபவ குறிப்புகளின் தொகுப்பான ‘சமூக நீதிக்கான அறப்போர்’ எனும் இந்நூல், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக இருந்த முனைவர் வசந்தி தேவி அவர்களுடன் பி.எஸ்.கிருஷ்ணன் மேற்கொண்ட உரையாடலை உள்ளடக்கமாக கொண்டது. சவுத் விஷன் பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளார்.*

*பின் இணைப்பாக “சமூக சமத்துவத்துக்கு வழிகாட்டும் செயல்திட்டம்” என்று பி.எஸ்.கிருஷ்ணன் அவர்கள் தயாரித்த ஆவணம் மொழிபெயர்த்து வழங்கப்பட்டுள்ளது.*

*அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள், சமூக நீதிக்கான கூறுகள், விளிம்புநிலை மக்களின் வாழ்க்கை மேம்பட அரசமைப்பில் கொடுக்கப்பட்டுள்ள சரத்துகள் போன்றவை பற்றி எல்லாம் தெளிவாகவும் அனுபவ ரீதியிலும் பேசுகிறார். தலித்துகளுக்கும் , ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் இவர் உதவ முன்வந்தபோது அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த சிலர் இவருக்கு கொடுத்த சிக்கல்களை, இந்நூலில் பதிவுசெய்துள்ளார் .*

*பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை செயல்படுத்துவதில் அதில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் பற்றியும் சாதி வாரி இட ஒதுக்கீட்டின் முக்கியத்துவம் பற்றியும் விரிவாகவே பேசுகிறார். அகில இந்திய அளவில் இருக்கும் ஓ.பி.சி. (OBC) இட ஒதுக்கீட்டில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் பற்றியும் ரோகிணி குழுவின் பரிந்துரைகள் பற்றிய செய்திகளும் இதில் அடங்கியுள்ளன.*

*பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டால் பயனடைந்த சமூகங்கள் அதில் பின்தங்கியுள்ள பிற சமூகங்களின் நலன் கருதி இடஒதுக்கீட்டைத் துறக்கவும் தயாராக இருக்க வேண்டும் என்கிறார், சம அளவில் இடஒதுக்கீடு பரவாமல் இருப்பதை, சரி செய்ய கிரிமீலேயர் (Creamy Layer) முறையை விட, உள் ஒதுக்கீடு முறையே உகந்தது என்றும் சொல்கிறார்.*

*சமூகநீதி குறித்தும், சாதி ஒழிப்பு குறித்தும் பல தெளிவான விளக்கங்களைப் பெறுவதற்கு இந்நூல் அவசியம் உதவும். இப்படிப்பட்ட ஆவணங்களும் நேர்காணல்களும் சமூக நீதியின் மேல் அக்கறை கொண்ட பிற உயரதிகாரிகளிடமிருந்தும் மேற்கொள்ளப்பட்டால், அமைப்பில் இருக்கும் சிக்கல்களை உணரவும், அதைக் கடந்து சமூக நீதியை நிலைநிறுத்தவும் அவசியம் பயன்படும்..*

**...வாசிப்போம்.**

# ஃப்ளாஷ்பேக்



பெ.நிஜந்தன்



## தலைவரிடம் பிறந்தநாள் வாழ்த்து!

2012-ஆம் ஆண்டு, அக்டோபர் 14-ஆம் தேதி எனது பிறந்தநாளை முன்னிட்டு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து, பிறந்த நாள் வாழ்த்துப் பெற்றேன். கழக வளர்ச்சிக்காக நிதி அளித்து புகைப்படம் எடுத்து மகிழ்ந்தேன். தலைவரிடம் ஆசி பெற்றதை, இன்றளவும் நினைத்துப் பெருமை கொள்கிறேன்.

**– வழக்கறிஞர் பெ.நிஜந்தன்,**
**முன்னாள் வழக்கறிஞர் அணி**
**மாவட்ட துணை அமைப்பாளர்,**
**சென்னை தென்மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# நம் வரலாறு

## மக்களின் துயர் துடைக்கும் நாள்!

1957-ஆம் ஆண்டு, கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், ‘உற்பத்தி சாதனங்கள் அனைத்தும் அரசு மயமாக்கப்படும் நாள்தான் நாட்டு மக்களின் துயர் துடைக்கும் நாளாக அமையும். கல்வி, பல கட்டங்களிலும் தாய்மொழியிலேயே அளிக்கப்பட வேண்டும். இந்தித் திணிப்பு, ஒரு சாராரின் அரசியல் ஆதிக்க வெறியையே பிரதிபலிக்கிறது. அதற்கு இடமளிப்பது பெருந்தீமை பயக்கும்’ என வலியுறுத்தியது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.